தமிழ்நாடு அரசு

<u>சுருக்கம்</u>

வீட்டுவசதி – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் – மனைகள், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், கடைகள், கடைகளுக்கான மனைகள் மற்றும் வணிக வளாக மனைகள் – அரசு விருப்புரிமையின் கீழ் விற்பனை செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.4(1)) துறை

அரசாணை (நிலை) எண்.288 நாள் 28.8.1997

படிக்கப்பட்டவை:

(1). அரசாணை எண்.929, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 5.6.1991.

(2). அரசாணை எண்.930, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 5.6.1991.

(3). அரசாணை எண்.1574, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 24.12.1991.

(4). அரசாணை எண்.961, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 3.12.1993.

* * * * *

<u>ஆணை:</u>

அரசாணை நிலை எண்.1574, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீ.வ.4(1)) துறை, நாள் 24.12.91–இல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்யும் பொழுது, 85 விழுக்காடு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் குலுக்கல் முறையிலும், 15 விழுக்காடு அரசு விருப்புரிமையின் கீழும் ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது பல்வேறு பிரிவினருக்கு விகிதாச்சார முறையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று அரசு ஏற்கனவே ஆணையிட்டு உள்ளது. ஆனால் அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் எதுவும் இப்பொழுது இல்லை.

3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட மனைகள், கட்டப்படும் வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றை அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்ய வழிகாட்டு நெறிமுறைகள் அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே, இதை கவனமாக பரிசீலனை செய்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மனைகள், வீடுகள், அடுக்குமாடி வீடுகள், கடைகள், கடைகளுக்கான மனைகள் மற்றும் வணிக வளாக மனைகள் ஆகியவற்றினையும் மற்றும் அரசு விருப்புரிமையின் கீழ் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு இரத்து செய்யப்பட்டவை, திரும்ப ஒப்படைக்கப்பட்டவை ஆகியவற்றையும் விற்பனைக்காக

அரசு விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்யும்பொழுது, கீழ்க்கண்ட



பிரிவினருக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யலாம் என்றும், விண்ணப்பதாரர்கள் ஒதுக்கீடு பெறுவதற்கு வீட்டுவசதி வாரியம் ஏற்கனவே விதித்துள்ள தகுதியின் அடிப்படையில், 15 விழுக்காடு ஒதுக்கீடு செய்யலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது:–

(1). திருமணமாகாத பெண்கள் (Single Woman) கணவனால் கைவிடப்பட்டோர் / கணவனை இழந்தோர்.

(2). சமூக சேவையில் ஈடுபட்டுள்ளோர்.

(3). உடல் ஊனமுற்றோர்.

(4). இராணுவத்தினர் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

(5). தனியாக வசிக்கும் முதியோர் (Senior Citizen)

(6) அறிவியல், கலை, இலக்கியம், பொருளாதாரம், பொது நிர்வாகம், விளையாட்டு போன்ற துறைகளில் உபயோகமாக பணியாற்றி சமூகத்தில் சிறப்பு வாய்ந்தவர்கள்.

(7). சுதந்திர போராட்ட தியாகிகள் / மொழிக்காவலர்கள்.

4. மேலே குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஏ.பி. முத்துசாமி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை–35.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.5) துறை, சென்னை–9.
நகல்
ஆளுநரின் தனிச் செயலர், ராஜ்பவன், சென்னை–32.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
வீட்டுவசதி அமைச்சரின் முதுநிலை உதவியாளர், சென்னை–9.

/ /ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.